GCG1-5-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்:** எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நம்முடைய வாழ்வில் தாக்கத்தை ஏற்ப்படுத்த கூடிய உலகளாவிய புள்ளி விபரத்தை பற்றி பேசிக்க்கொண்டிருக்கிறோம். உதாரணமாக, இந்த பூமியில் 7*00* கோடி மக்கள் உள்ளனர். கிறிஸ்தவர்களாகிய நாம், இன்னும் நானூற்றைம்பது கோடி மக்கள் கர்த்தராகிய இயேசுவை அறியாதிருப்பதை நினைவில்கொள்ள வேண்டும். மேலும் இயேசு, தாமே இவர்களை எப்படி சென்றடைவது என்ற திட்டத்தையும் கொடுத்திருக்கிறார். அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். நாம் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டியையும் சீஷராக்க வேண்டும். அந்த கட்டளையோடு கூட, இன்றைக்கு நாம் பார்க்க இருப்பது, இயேசு நமக்கு கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை: “இதோ, சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.” என்ன அருமையான வாக்குத்தத்தம். அதை பற்றிதான் பார்க்க இருக்கிறோம் சபை வரலாற்றில் எப்படி பரிசுத்தவான்களின் வாழ்வை மாற்றி தாக்கத்தை உண்டாகியதென்றும் பார்க்க இருக்கிறோம்.

கனம் பொருந்திய விருந்தினர் நம் மத்தியில் இருக்கிறார். பிரசித்திபெற்ற வேத போதகரான ராபி கேலட்டி. தேவனுடைய வார்த்தையை எப்படி விளக்கி சொல்வதென்று அவருக்கு நன்றாக தெரியும். சரி ராபி, இன்றைக்கு இதிலிருந்து துவங்கிடலாம், இந்த வாக்குத்தத்தத்தை பற்றி சொல்லுங்க, விலையேறபெற்ற வாக்குத்தத்தம். இது ஏதோ சேர்க்கை வரியல்ல, பிரதான கட்டளையோடு இணைக்கப்பட்டது அல்ல. இது முக்கியமானவற்றில் ஒன்றாகும். இதை விளக்கிடுங்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. இயேசு நமக்கு இந்த கட்டளையை கொடுத்தார், அதன் முடிவில்தான்... இந்த வாக்குத்தத்தத்தை கொடுத்திருக்கிறார், பிரதான கட்டளையின் இறுதியில்: “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.” சரி, இதில் சுவாரஸ்யமானது என்னன்னா, இந்த பகுதியியை பார்க்கும்போது, இந்த வாக்குத்தத்தம் ஒரு பணி ஆணையோடு இணைந்திருக்கிறது, சில வாரங்களுக்கு முன்பு அதை பற்றி பார்த்தோம், “போய், சீஷர்களை உருவாக்குங்கள்”. அவர் என்ன சொல்கிறார் என்றால், “நீங்க உலகத்திற்குள் சென்று சீஷர்களை உருவாக்குங்கள், உலகத்தின்

முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருப்பேன்.” சரி, நீங்க சொன்னது மாதிரி இது மாற்று கருத்து உடைய காரியம் கிடையாது. இறுதியாக இதை சொல்லி முடிக்கலாம் என்று இயேசு யதார்த்தமாக சொல்லவில்லை. இது ஒரு வித்தியாசத்தை ஏற்ப்படுத்தகூடிய வித்தியாசமான காரியம். இது பிரதான கட்டளையின் மறுக்க முடியாத தன்மையாக இருக்கிறது.

இதில் சுவாரஸ்யம் என்ன வென்றால், துவங்கும்போது, ஜான், ஆரம்பத்தில், தமது அதிகாரத்தை செலுத்துகிறார். வசனம் பதினெட்டில் சொல்லுகிறார், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது,” அதற்கு பிறகு முடிக்கும்போது தமது பிரசனத்தின் வாக்குதத்தத்தோடு நிறைவு செய்கிறார். இதை தான் அவர் இங்கு சொல்ல விரும்புகிறார். அவர் சொல்கிறார், “நீங்க எங்கபோனாலும் நான் உங்களுடனே இருப்பேன். சரி, இதை கேள்விப்பட்ட சீஷர்களின் எண்ணம் எப்படியிருந்திருக்கும் என்று யோசித்து பாருங்கள். பன்னிரண்டு பேர் உதாரணத்திற்கு இருக்கிறார்கள், இவர்கள் அனைவரும் தங்கள் வாழ்வின் மத்தியில் கிறிஸ்துவை பின்பற்றும்பாடு அழைக்கப்பட்டார்கள். அவரோட வாழ்ந்தவர்கள். அவர் போதிப்பதை கவனித்தார்கள், அற்புதங்கள் நடப்பிப்பதை கண்டவர்கள். மக்கள் கூட்டத்தில் அவர் தப்பித்ததை கண்டவர்கள். எல்லாவற்றையும் பார்த்திருக்கிறார்கள். இப்ப இயேசு அவங்ககிட்ட சொல்றாரு, “ஓகே, கைஸ், நா போக போகிறேன்.” இதுவரைக்கும், சீஷர்கள் ஒருவேளை இப்படியாக சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன், “இயேசுவே, நீங்க இல்லாம எங்களால நிச்சயம் இதை செய்ய முடியாது. அதாவது, நீங்க இல்லாம செய்றது கொஞ்சம் கடினம்தான். எப்படி நீங்க இல்லாம இத செய்யமுடியும் என்றிருபார்களோ?

சீஷத்துவத்தில் நான்கு விதமான முன்னேற்ற நிலையை வேதத்தில் இயேசு நமக்கு சொல்லியிருக்கிறார். அதை உங்களுக்கு எடுத்து சொல்ல விரும்புகிறேன். முதலாவது என்ன வென்றால்: இயேசு அதை செய்தார் – சீஷர்கள் அதை பார்த்தார்கள். ஞாபகம் இருக்கிறதா மலை பிரசங்கத்தின் போது, இயேசு சீஷர்களை தம்மை பின்பற்றும்படி

அழைத்தார். அவர்கள் கூட்டத்தோடு உட்கார்ந்து அவர் தேவனுடைய வார்த்தையை விளக்கி சொல்வதை கேட்டுகொண்டிருந்தார்கள். வேதத்தில் அடுத்த நிலையை பற்றியும் பார்க்க முடிகிறது, இயேசு செயல்படுகிறார் – சீஷர்கள் துணையாக இருந்தார்கள்.

ஐயாயிரம் பேரை போஷித்தது உங்களுக்கு நினைவிருகிறதா நாலாயிரம் என்றும் சொல்ல முடியும். இயேசு அப்பத்தை பிட்டு தந்தார், மீன்களையும் எடுத்து தந்தார், அவர் போதித்தார், அதன் பிறகு சொல்கிறார், "நண்பர்களே, இந்த உணவை பங்கிட்டு கொடுங்கள். அதோடுகூட, எல்லா கூடைகளையும் சேகரித்து என்னிடத்திருக்கு கொண்டு வாருங்கள்." இயேசு செயல்பட்டார் – சீஷர்கள் உதவியாக இருந்தார்கள்.

ஆனா இங்க ஒரு மாற்றம் வருது. எதனால மாற்றம் என்றால் இயேசு சொல்கிறார், "நீங்க செயல்பட போறீங்க நா உங்களுக்கு உதவியாக இருப்பேன் என்கிறார்." மறுரூப மலையில் இருந்து இயேசு இரங்கி வந்த சம்பவம் நினைவிருக்கிறதா? ஒரு இக்கட்டான நிலையை சந்திக்கிறார் தன் மகனை அழைத்துக்கொண்டு வந்த தகப்பன் அவரிடம், "உமது சீஷர்களால் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கும்படி என் மகனை அழைத்துவந்தேன் ஆனால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இயேசுவே உம்மால் செய்யமுடியுமா என்றான்." அதற்கு இயேசு, "நீங்கள், பின்னிட்டு போங்கள். என்னால் ஏதாகிலும் செய்யமுடியுமா, இது வேடிக்கையாக இருக்கிறதே? என்னால் எல்லாம் கூடும். அதை விசுவாசிக்கிறாயா? இங்க இயேசு உதவி செய்கிறார். சீஷர்களுக்கு உதவி தேவைப்படும்போது, அவர் அங்கே வருகிறார்.

இதுதான் இறுதியான முன்னேற்ற நிலை: சீஷர்கள் செயல்பட்டார்கள் – இயேசு பார்த்துகொண்டிருந்தார். சரி, இயேசு பார்க்க மாட்டார் என்று நமக்கு தெரியும். ஆனா அவர் ஒருபடி பின்னுக்கு சென்றார். ஞாபம் இருக்கிறதா அவர் எழுபது அல்லது எழுபத்திரண்டு பேரை அனுப்பினாரே. அப்ப சொன்னார், "நான் உங்களுக்கு சகல அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறேன் பிசாசுகளை துரத்துங்கள், என் நாமத்தினாலே சுகப்படுத்தி தீர்க்கதரிசனம் சொல்லுங்கள்." அவர்கள் திரும்பி வந்து அவரிடம்

சொன்னார்கள், “இயேசுவே நடந்ததை உங்களால் நம்பவே முடியாது. நீங்க சொன்னது சரிதான். நான் பிரசங்கித்தோம் சுகப்படுத்தினோம் நீங்க நன்றாக கிரியை செய்தீர்.”

சரி, புதிய ஏற்ப்பட்டு விசுவாசியாக, நம்முடைய வாழ்வில் தேவன் கிரியை செய்யாத பகுதி என்று எந்த நிலையம் கிடையாது, ஏன்னா அவர் தமது பிரசனத்தை நமக்கு வாக்களித்திருக்கிறார். சரி, சீஷர்கள் பாரத்தோடு இருக்கிறார்கள். யோவான் 14:15-19 இயேசுவின் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறோம், இன்றைக்கு நேயர்களுக்கு அது உற்சாகத்தை அளிப்பதாக இருக்கும், உலகமெங்கிலும் உள்ள விசுவாசிகளுக்கு உதவிடும். “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைகொல்லுங்கள். நாம் பிதாவினிடத்தில் வேண்டிகொள்வேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். உலகம் அவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரை பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்.” – இதை பாருங்கள் –“உங்களுக்குள் இருப்பார். நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்.” இயேசு சொல்கிறார், “உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சம் காலத்திலே உலகம் என்னை காணாது, நீங்களோ என்னை காண்பீர்கள் நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.” வசனம் 2௦தான் திறவுகோல்: “நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.”

சரி, மத்தேயு இந்த இரகசியத்தை தமது  சுவிசேஷத்தின் துவக்கத்திலும் முடிவிலும் சொல்லியிருக்கிறார். அவருடைய சுவிசேஷத்தின் துவக்கத்தில், மத்தேயு 1ல், சம்பவம் நினைவிருக்கிறதா? கர்த்தருடைய தூதனானவர் வந்து சொல்லுகிறார், “அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாயாக,” பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டது போல, அதற்கு அர்த்தம், :தேவன் நம்மோடு இருக்கிறார்.” மத்தேயு துவக்கத்தில் இதை உள்ளே கொண்டுவருகிறார். இதுல ஏதாவது ஆச்சரியம் இருக்குதா

சுவிசேஷத்தின் முடிவிலும், மத்தேயு 28:20, கடைசி வசனத்தில், இறுதியாக சொல்லும்போது, “உங்களுடனே சகல நாட்களிலும் இருப்பேன் என்கிறார்.” மத்தேயு சுவிசேஷத்தின் நிறைவு இப்படிதான் இருக்கிறது, இன்றைய விசுவாசிகளுக்கு இது ஊக்குவிக்கும் ஒன்றாக இருக்கிறது, என்ன நடந்தாலும் பரவாயில்லை, எங்க போனாலும் சரி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பது மட்டுமல்ல, நமக்குள்ளும் இருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நம்முடைய வாழ்வில் இதை இயேசு எப்படி செயல்படுத்தினார் என்பதற்கு சில உதாரணங்களை பார்க்க இருக்கிறோம். ஆனா பழைய ஏற்ப்பாட்டில் தேவன் எப்படி ஒருவரோடு இடைபட்டார் என்பதையும் பார்த்திடலாம், அவர்தான் மோசே.

**ராபி கேலட்டி:** ஆமா. மோசே ஒரு சிறந்த உதாரணம்,என நினைக்கிறேன். மோசேயை ஞாபகமிருக்கிறதா. அவன் திக்குவாயன், மந்த நாவுடையவன். தேவன் தன்னை பயன்படுத்துவார் என நினைக்கவில்லை. இப்ப அவனுக்கு எண்பது வயது, வனாந்தரமான இடத்தில், தேவன் அவனிடம் வந்து சொல்கிறார், “மோசே, நீ எனக்காக பேச விரும்புகிறேன்.” அதற்கு மோசே சொல்கிறான், “தேவனே, உமக்காக என்னால் பேச முடியாது.” அதற்கு பிறகு இந்த வாக்குத்தத்தத்தை அவனுக்கு கொடுத்தார். யாத்திராகமம் 3:11ல் அதை பார்க்கிறோம். “அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குபோகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவர நான் எம்மாத்திரம் என்றான்.” அதற்கு கர்த்தர், “நான் உன்னுடனே இருப்பேன்.நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.” இதுதான் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம். பார்வோனுக்கு முன்பாக நீநிற்கும்போது கடினமான சூழ்நிலை வரும்போதும் இக்காடான நிலை உண்டாகும்போது, அதாவது, அந்த சமயத்தில் உலகத்தின் அதிபதியாக இருந்தவனுக்கு முன்பாக போகிறான், பலம் நிறைந்தவன், சகல காலத்திலும் வல்லமை நிறைந்தவன். இங்க தன வாழ்நாள் முழுதும் ஆடுகளை

மேய்த்துகொண்டு மேய்ப்பனாக இருப்பவன். இவன் பார்வோனுக்கு முன்பாக போய் நின்று பேச வேண்டும், “என் ஜனங்களை போக விடு.” தேவன் சொல்கிறார், “நீ கவலைபட அவசியமில்லை மோசே, ஏன்னா நான் உன்னோடு கூட இருக்கிறேன்.”

இப்ப, இதை இன்னும் கொஞ்சம் ஆழமாக பார்க்கலாம். மோசே இஸ்ரவேலர்களை வனாந்திர வழியாக நடத்திசென்றது நினைவிருக்கிறதா? அவங்க முறுமுறுக்க துவங்கினார்கள். எல்லா நேரமும் முணுமுணுத்து கொண்டே இருந்தார்கள். அப்ப தேவன் சொல்கிறார், “நான் உன்னை வழி நடத்துவேன். இரவில் அக்கினி ஸ்தம்பத்தையும் பகலில் மேக ஸ்தம்பத்தையும் அனுப்புவேன் என்றார்.” தேவன் மோசேயிடம் கூறிய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றினார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. ஜனங்கள் இதை தான் புரிந்துகொள்ளும்படி விரும்புகிறேன். அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், இதை அவர்களும், கேட்டுகொண்டிருப்பார்கள் என நம்புகிறேன். அவங்களுக்கு தெரியும் இயேசு உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கும்படி கட்டளை கொடுத்திருக்கிறார். அதற்கு அர்த்தம் அவர்களும் யாராவது ஒருவரிடம் பேச வேண்டும். ஜனங்கள் நம்மை பார்த்து சொல்கிற விஷயம், இது, உங்களுக்கு எளிதாக தோன்றலாம். ஆனா, என்னக்கு அது சுலபமாக இருந்தது கிடையாது. இதை முதல் முதல் கேள்விபட்டது எனக்கு நினைவிருக்கிறது. அப்பா ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தது. இதை நான் முயற்சிக்கப்போகிறேனா? நீங நினைத்தேன், இதை நான் யாரிடமாவது சொன்னால் – அப்ப நா உயர்நிலை பள்ளியில் இருந்தேன் – யோசித்தேன் – சொன்னா நண்பர்கள் இல்லாமல் போவார்கள், எனக்கு இதுவரை இருந்த எல்லா பேரும், என்னுடைய செல்வாக்கும், போயிரும் அவங்க என்ன பத்தி என்ன நினைப்பாங்க? ப்ளா, ப்ளா, ப்ளா. தேவன் எனக்கு உணர்த்தினார், அதானால் இறுதியா முடிவெடுத்தேன், “என்ன நடந்தாலும் சரி, நா, முயற்சி செய்திடுவேன்.” இப்ப, மற்றவர்களிடம் பேச வேண்டும் என்பதை பற்றிய எந்த காரியமும் செய்திகளும் எனக்கு தெரியாது. ஆனா ஒரு மூலையில்

திரும்பி நின்று சொன்னது ஞாபகம் இருக்கிறது, "சரி, நா இதைதான் செய்யவேண்டும் எனபது உம்முடைய விரும்பமாக இருக்குமானால் நிச்சயம், முயற்சிக்கிறேன்."

இப்ப, மக்களுடைய கருத்து, "உங்களுக்கு பதில் தெரியாத கேள்விகளை மக்கள் கேட்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? என்னுடைய புத்தகங்களோடு எனக்கு வேதத்தையும் எடுத்து செல்வேன், ஜனங்கள் வேதாகமத்தை பார்த்து என்னிடம் கேட்ப்பார்கள், "நீங்க ஒரு கிறிஸ்தவரா?எனது பதில், "ஆமா. நான் கேட்பேன், "நீங்க கிறிஸ்தவரா? இல்லை, என்பார்கள்." அப்பறம் ஒரு கேள்வியை கேட்ப்பாங்க. சரி, அந்த நாட்களில் எல்லாம், அதாவது நா தேவன் பக்கமாக திரும்பி, ஆண்டவரே, உமக்கு சாட்சியாய் இருப்பேன். ஜனங்களிடம் பேசுவேன் என்று சொன்ன பிறகு." எனக்கு நினைவிருக்கிறது என்னுடைய ஒரே நிலையான பதிலை வைத்திருந்தேன், "எனக்கு தெரியாது என்பேன்" ஆனா சேர்த்து சொல்லுவேன்: நான் ஒன்று சொல்லுகிறேன். இன்றைக்கு நா வீட்டுக்கு போயிட்டு அதை பார்த்துவிட்டு நாளைக்கு வந்து பதில் சொல்கிறேன் என்பேன்." அதற்கு அவர்கள் சரி என்பார்கள். அதாவது, எனக்கு சகல ஞானமும் இருக்கனுன்னு அவங்க எதிர்பார்க்கல, சரியா? இதுதான், உண்மை, நா வீட்டுக்கு பெ அந்த வசனங்களை தேடி பார்த்து அதை பற்றிய தகவல்களை சேகரிக்க துவங்கிடுவேன். இப்படிதான் கற்றுக்கொள்ள முடியும். நீங்களும் முயற்சி செய்யுங்க. ஏதோவொரு இடத்தில் அளிப்பான் வேலை செய்ய வேண்டும். இதை நீங்க நிச்சயம் முயற்சி செய்து பார்க்கணும்.

போய் இதை செய் என்று தேவன் சொன்ன காரியங்களை  செய்தது நினைவிருக்கிறது, தேவன் என்னோடு சேர்ந்து நிச்சயம் செயல்படுவார் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது. இது எனக்கும் பொருந்தும் என்பதை புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. இதை கேட்டுகொண்டிருக்கிறவர்கள் கூட, ஏதோவொரு விஷயம் நடக்கப்போகிறது என்று தங்கள் நண்பரிடம் போய் சொல்வது அவங்களுக்கு கடினமாக இருக்கலாம், இது நடக்கும் தேவன் இடைபடுவார் என்று சொல்ல முடியுமா. இதைதான் இப்போது நாம் பார்த்துகொண்டிருக்கிறோம். இயேசு சொல்கிறார் "நான் உங்களுடனே இருப்பேன்." பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்வை தருவார். அவர் பேசப்போகிறார். உங்களுடைய யதார்த்தத்தை அவர் பயன்படுத்துவார். உங்களுக்கு ஒருவேளை பட்டடப்படிப்பு இல்லாமல்

இருக்கலாம். எல்லா தகவல்களும் உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம், ஆனா துவங்கிடுவீர்கள். உங்க சாட்சியுடன் ஆரம்பியுங்கள். அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள துவங்குங்கள், நடப்பதை கண்டு நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

நான் நம்புகிறேன், நேயர்களே, இதை கேட்டுகொண்டிருக்கிற நீங்கள், இதை ஒருவரிடமாவது முயற்சித்து பார்க்க உற்சாகப்படுத்துகிறேன். இதற்கிடையில், உங்களிடம் பதில் இல்லை என்றாலும், அதற்கான பதிலின் ஒவ்வொருபாகமாக ஒன்று சேர்க்க முயலுங்கள். உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று உங்கள் நண்பர் எதிர்பார்ப்பதில்லை. உங்களுக்கு இருக்கிறஅறிவு எல்லா விதத்திலும் அவர்களை வியப்படைய செய்யும். தேவன் உங்களிடத்தில் நடப்பித்ததை சொல்ல துவங்குங்கள். அதோடு எதையாகிலும் சேர்த்துக்கொள்ள விரும்பினாலும் சரி.

**ராபி கேலட்டி:** சரி, இப்ப, இதுதான் விஷயமே. இதற்கு பட்டபடிப்பு அவசியமில்லை.

உங்கள் விசுவாசத்தை எப்படி பகிர்ந்துகொள்வது என்பதை அறிய வேதாக கல்லூரிக்கு போக வேண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் மக்கள் இருக்கிறார்கள். மதிய உணவு சாப்பிடும் நண்பர்கள், சிலருடன் காபி சாப்பிடுவோம், சிலருடம் ஒரே இடத்துக்கு போகிறவர்களாக இருப்போம். நம்மை சூழ்ந்திருக்கிரவர்களுக்கு ஏன் சொல்லாமல் இருக்கிறோம் எதற்காக இப்படி நடந்துகொள்ளுகிறோம். எதற்காக தேவனை நேசிக்கிறோம், அல்லது நம்முடைய சொந்த வாழ்க்கையில் என்ன நடந்தது?

அதாவது, டேவிட் லிவிங்ஸ்டன் வாழ்க்கை என் நினைவிற்கு வருகிறது. அதாவது, கிறிஸ்தவ வாழ்க்கையை பற்றி யோசிக்கிறோம், சிலசமயம் எளிதாக இருக்கிறது, அமெரிககாவில் அது எப்போதும் சுலபமாகத்தான் இருக்கும். ஆனா அநேக சகோதர சகோதரிகள் கடினமான சூழ்நிலையை எதிர்கொள்கிரவர்களாக இருக்கிறார்கள். இது உற்சாகமூட்டும் சம்பவமாக இருக்கும் என நன்புகிறேன், ஜான். டேவிட் லிவிங்ஸ்டன் ஆப்ரிகாவிற்கு மிஷனரியாக சென்றார், அங்க பல மிஷனரிமார்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்து வருவது அவருக்கு தெரியாது. அவருடைய வாழ்நாளில், அவர் 29, 000 மைல்கள் நடந்தே போயிருக்கிறார், கற்பனை செய்ய முடியுமா. அவர் 29, 000 மைகள்

பிரயாணித்து சுவிசேஷத்தை பகிர்ந்திருக்கிறார். அவர் ஒரு முறை சிங்கத்தினால் சூறையாடப்பட்டார். தனது வாழ்நாளில் பாதிநாட்கள் கண்பார்வை குறைவோடு ஊழியம் செய்தார். சொந்த இடத்தில் இருந்து உதவியவர்கள் அவரை தாக்க ஆரம்பித்தார்கள். அந்த சமுதாய மக்கள் அவரை தாக்க ஆர்மபித்தனர். ஒருநாள் அவருடைய டைரியில் இந்த வரிகளை எழுதியிருந்தார், இது வியப்பாக இருந்தது. அவர் சொல்கிறார்:"தேவனே, எங்கு வேண்டுமானாலும் அனுப்பும், ஆனால் நீர் வர வேண்டும். எந்த பாரத்தையும் கொடுத்திடும், என்னை தாங்கும்படி செய்யும். எந்த கட்டிளிருந்தும் என்ன துண்டித்திடும் ஆனால் அந்த கட்டு உம்முடைய ஊழியத்தினால் உண்டாயிருக்கட்டும்." எனக்கு ஆச்சரியமா இருக்கும், இன்றைக்கு எத்தனை விசுவாசிகள் இப்படி சொல்லமுடியும்? தேவனே, உம்மை விட அதிகமாக என் கவனத்தை ஈர்க்கும் எல்லாவற்றையும் என்னை விட்டு அகற்றிடும் என்பீர்களா?"

ஸ்காட்லாந்துக்கு வரும்படியான சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்தது, அவர் கிளாஸ்கோ பல்கலை கழகத்தில் உரையாற்றினார். தேவன் செய்தவற்றை அந்த மாணவர்களோடு பகிர்ந்துகொள்ள துவங்கினார். அவர் சூரையாடப்பட்டதையும் வாழ்வில் கடினமான நிலையை சந்தித்ததையும் பார்க்க முடியும். அவருடைய இரத்த நாளங்களில் 27 விதமான வியாதிகள் இருந்ததாம். அவர் ஒரு சிங்கத்தினால் தாக்கப்பட்டதால் அவருடைய ஒரு பகுதி மரத்து போயிருந்ததாம். அவர் மேடைக்கு வந்து நின்று இதையெல்லாம் பகிர்ந்திருக்கிறார். அவர் சொன்னார், "இந்த கடினங்களை எதற்காக அடைந்தேன் என்று நினைக்கலாம்." என்று சொல்லி அவர் என்ன சொன்னாருன்னா. அவர் சொன்னார், "என்னுடைய இந்த பிரயாணத்தின் கடினமான இக்கட்டான தனிமையான சூழ்நிலைகளில் உறுதியாக நிற்கச்செய்தது எது தெரியுமா? கிறிஸ்துவின் வாக்குத்தத்தம், "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே இருப்பேன் என்பதுதான்." இதோ உங்களை ஊக்குவிக்கும் வார்த்தை. இந்த வாக்குத்தத்தம், இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன்பு சீஷர்களிடம் சொன்னது, இன்றைய உலகில் இன்று நாம் அதை சுதந்தரிக்க முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி,நா கென்யாவுக்கு போயிருக்கேன், டேவிட் லிவிங்ஸ்டன் கடந்து வந்த அந்த இடங்களுக்கு போயிருக்கிறேன், அங்குள்ள காடுகளில் சிங்கத்தின் கெர்ஜிப்பை கேட்டிருக்கிறேன். அந்த பாதையில் கடந்து செல்ல கிறிஸ்துவின் பிரசன்னம் அவருக்கு போதுமானதாக இருந்ததை நினைத்து வியந்திருக்கிறேன், அந்த ஜனங்களிடம் சென்றார், 29, 000 மைல்கள் நடந்து போயிருக்கிறார்.

இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களுக்கு நினைப்பூட்டும் விதமாக மறுபடியும் சொல்லுகிறேன். ஆப்ரிக்காவில் இருக்கும் மக்கள் இனம், அல்லது ஒரியண்டிலிருந்து, ஐரோப்பாவில், நம்மால் கற்பனை செய்ய முடியாத இடமாக இருக்கலாம், அங்கிருந்து இப்போது நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் கேட்க்கலாம், "சரி, என்னை பற்றி என்ன இருக்கு? நா டேவிட் லிவிங்ஸ்டன் இல்லையே. நான் மோசே இல்லையே, சரி. இந்த நேயர்களுக்கு நாம சொல்ல விரும்புகிற விஷயம் என்னவென்று கேட்டால் இந்த வாக்குத்தத்தம் அவர்களுக்கும் பொருந்தும் என்பதுதான். இயேசு சொல்கிறார், "நான் உங்களுடனே இருப்பேன்."

இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம் திரும்ப வந்ததும் சில தனிப்பட்ட அனுபவங்களை பகிர்ந்திட இருக்கிறோம், ஆனால் மற்ற காரியங்களை பற்றியும் பேசிடுவோம், ஆமா, நீங்க புறப்பட்டு போகும்போது உண்டாயிருக்கும் வல்லமை, கிறிஸ்துவை சார்ந்திருக்கும் நிலையை பொறுத்திருக்கிறது. அதற்கான சில வாக்குத்தத்தங்களை கொடுத்திட இருக்கிறோம், எனவே இணைந்திருங்கள். மீண்டும் சந்திப்போம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. பிரதான கட்டளையை பற்றி ராபி கேலட்டியுடன் பேசிகொண்டிருக்கிறோம். இயேசுவின் கட்டளைக்கு கீழ்படிந்து நம்முடைய அயலகத்தார், நம்முடைய நண்பர்களிடம், சுவிசேஷத்தை பகிர்ந்துகொண்டு, அவர்களை சீஷர்களாக உருவாக்கும்போது, இயேசு நம்மோடு இருப்பதாக வாக்கு

பண்ணியிருக்கிறார். பெரிய பட்ட படிப்பு படித்தவர்களோடு மட்டும் அவர் இருப்பதில்லை, கல்லூரிக்கு போய் படித்தவர்களோடு மட்டும் கிடையாது, மேயப்பர்களோடு மட்டும் கிடையாது, புறப்பட்டு போகிற கிறிஸ்தவர்களோடு இருப்பதாக சொல்லுகிறார். உங்க மனதில் நீங்க பதித்து கொள்ளும்படி நான் விரும்புகிற காரியம் இயேசு உங்களுக்கு வெளிப்படுத்திடுவார். சரி, ராவி, இதை வசனத்தின் அடிப்படையிலும் தனிப்பட்ட அனுபவத்திலிருந்தும் விளக்கி சொல்லிடுங்கள்.

**ராபி கேலட்டி:** சரி. இதை தெரிந்திருப்பது அவசியம், ஜான், இது நம்முடைய திறமையை சார்ந்திருப்பதில்லை. இது தேவனுடைய நாம் ஆயத்தமாக இருப்பதை சார்ந்திருக்கிறது. தேவன் தேறினவர்களை அழைப்பதில்லை, அழைக்கப்பட்டவர்களை தேர்ச்சியடைய செய்கிறார். அதைதான் நாம் கவனிக்கிரவர்களாக இருக்க வேண்டும். போகும்படி ஆயத்தமாக இருப்பவர்களை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். வீட்டில் உட்கார்ந்துகொண்டு தங்களை பற்றியே யோசித்து கொண்டிருப்பவர்களுக்கு இந்த வாக்குத்தத்தம் பொருந்தாது. நாம் நடைமுறை படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.

சரி, இப்ப ஒரு கேள்வி: ஒரு விசுவாசியின் வாழ்வில் இது எப்படி நடக்கும்? சகோதரர் டிம், எனது குருத்துவர், ஒருநாள் என்னை தனியே அழைத்து இப்படியாக என்னிடம் சொன்னார். அவர் சொன்னார்: “கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எளிதாக இருக்கும் இல்லாவிட்டால் சாத்தியமாக இருக்காது. உங்களுடைய சுய பலத்தால் முயன்றால் அது முடியாத விஷயமாக இருக்கும். எப்ப எளிதாக இருக்குமென்றால், உனக்குள் கிறிஸ்து கிரியை செய்யவும், உன்மூலம் கிரியை செய்யவும் அனுமதிக்கும் போது என்றார்.” இந்த கோட்பாட்டைத்தான் கிறிஸ்துவை போல என்கிறோம் இதை வேதம் முழுவதும் நாம் பார்க்க முடியும். இது விசுவாசிகளை ஊக்குவிப்பதாகவும் இருக்கும் ஏன்னென்றால் இதை செய்கிறது நாம இல்லை  நமக்குள்ள இருந்து கிறிஸ்து செயல்படுகிறார் என்று தெரியும்.

2 கொரிந்தியர் 4:7ல் உள்ள வசனத்தை கவனியுங்கள். பவுல் சொல்கிறார்: “ இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில்

பெற்றிருக்கிறோம்.” அவர் என்ன சொல்ல வருகிறார் என்றால், நம்முடைய வாழ்வில் கிரியை செய்வது தேவ ஆவியானவர்தான், நாம் அல்ல என்கிறார். சரி, தமது தனிப்பட்ட அருட்பணி களத்தின் கூற்றில் மறுபடியுமாக இதைதான் பவுல் சொல்லியிருக்கிறார். கொலோசெயர் 1:27-29 பவுலின் அருப்பணி அறிக்கையாகும். இங்க பவுல் என்ன சொல்கிறார் என்றால்: “புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு தெரியப்படுத்த சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையை உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.” வசனம் இருபத்தெட்டு: “எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு புத்திசொல்லி எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.” இதை எப்படி செய்றீங்க, பவுல்? “அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடபிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.” பவுல் சொல்லுகிறார், இதுதான் உண்மை: நான் வேலை செய்கிறேன், ஆனா எனக்கு பின்னால் இருந்து மறைமுகமாக கிறிஸ்து எனக்குள் இருந்து என் மூலமாக கிரியை செய்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது எனக்கு பிடித்திருக்கிறது. நான் போராடுகிறேன் என்கிறார் சரியா. சரி, அதாவது, வேலை செய்வது. அதை நீங்கள் காண்பிக்க வேண்டும். நீங்க செயல்படனும் – நீங்க பிரசங்கிக்கிற சில வேளைகளில், அதை பற்றி ஆராயவேண்டும். ஆனா உண்மையில் செயல்படுவது எனபது உங்களுடைய சுய அறிவினால் எல்லாவற்றையும் கற்றுகொள்வதல்ல, அதை விளங்கிக்கொள்ளும் சத்துவத்தி கிறிஸ்து உங்களுக்கு கொடுக்க வேண்டும். நீங்க ஒருவரிடம் சென்று அவர்களோடு பேசுகிறீர்கள், அதாவது, அதற்கு சில ஆயத்தங்கள் அவசியமாக இருக்கிறது. சில விஷயங்களை சொல்ல தெரிந்திருக்க வேண்டும் சரியா. ஆனா உண்மையில், உங்களுக்கு பின்னாலிருந்து, நீங்க அங்க போய் செயல்படும்போது, கிறிஸ்து உங்களுக்கு வார்த்தைகளை கொடுத்து பெலப்படுத்தி நீங்க நினைத்து பார்க்காத விதத்தில் அவைகளை பேசும்படி செய்திடுவார்.

**ராபி கேலட்டி:** நிச்சயமாக. இதை பற்றி பவுல் பிலிப்பியரிலும் எபேசியரிலும் தொடர்ந்து சொல்லுகிறார். பிலிப்பியர் 2:12: ஆதலால், பிரியமானவர்களே, எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, சமீபமாய் இருக்கும்பொழுது மாத்திரமல்ல தூரமாக இருக்கும்பொழுதும், இத பாருங்க – "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." சரி, பவுல், இதை எப்படி செய்வது? ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராக இருக்கிறார்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர் என்ன சொல்றாருன்னா, அவர் சொல்ல வேண்டியதை , அவர் இங்க சொல்லீட்டாரு, இதை இப்ப செயல்படுத்த வேண்டும்.

**ராபி கேலட்டி:** அவ்வளவுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரியா? அங்கிருந்து அதை எடுத்து நீங்க, பயன்படுத்தணும். உண்மை இதுதான், அடுத்த வசனம் பாருங்க, அதாவது, தேவனுடைய சித்தம் – ஒன்றை செய்யும்படியான விருப்பத்தை உங்களுக்கு கொடுக்கிறார். அழிந்துபோகிறவர்களை சந்திக்கும் விருப்பத்தை கொடுக்கிறார். ஜனங்களை சென்றடையும் விருப்பத்தை கொடுக்கிறார். அவர் அந்த விருப்பத்தை கொடுக்கும்போது, நீங்க செயல்பட துவங்கினால், அதை செய்வதற்கு வேண்டிய சத்துவத்தை கொடுப்பார். "விருப்பத்தையும் செய்கையையும்." இந்த வார்த்தை "செய்கை" என்பது செய்யும்படியான பெலனை தருவார். நான் சொல்கிறேன், மறுபடியும், நம் பாதையில் அழிப்பானின் செயல் இருக்கும். இன்றைக்கு நீங்கள் தீர்மானிக்க வேண்டும், ஆமா, இந்த வாக்குத்தத்தங்கள் – தேவன் நம்மிடம் போய் சொல்வதில்லை, சரியா, நாம துவங்கும் போது அவர் நம்மை இன்னும் பெலப்படுத்திடுவார்.

**ராபி கேலட்டி:** ஆமாம். சரி, எபேசியர் 2:8 என் நினைவிற்கு வருகிறது. இது

இரட்சிப்பை பற்றி சொல்லுகிற வசனம், அநேகர் வசனம் 9உடன் நிறுத்தி கொள்கிறார்கள்: "கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவரும் மேன்மைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." வசனம் 10: "ஏனெனில் நற்க்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்கும் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." அவர் என்ன சொல்கிறார் என்றால், இந்த வார்த்தை : செய்கை என்பது கையின் கிரியையாகும், குயவன் களிமண்ணை உருவாக்குவதுபோல. நமக்கு என்ன சொல்கிறது, விசுவாசிகளாக, தேவன் நம்மில் கிரியை செய்கிறார், ஆனால் அவர் அந்த வேலையை நம் மூலமாகவும் நம்மை கொண்டும் செயல்படுத்துகிறார். எபேசியர் 2ல், இதை கவனிக்க முடியும். ஆனா எபேசியர் 3:20ஐ பாருங்கள், "நாம் வேண்டிகொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு." பவுல் இதைதான் நிருபங்கள் முழுவதும் சொல்லியிருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி, இந்த வேத வாசனைகள் எனக்கு பிடித்திருக்கிறது.

ஆனா ஜனங்கள் தேவ வசனத்தை கேட்பதோடு சரி அதை அவர்கள் வாழ்வில் முயற்சிக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து செயல்படும்படி விரும்புகிறேன், சரியா? எப்படி உங்கள் இருக்கையை விட்டு எழுந்து செயல்பட துவங்கலாம், ஏன்னா நீங்க இதுவரைக்கும் இந்த வாக்குத்தத்தத்தை நம்பவே இல்லையே? இறுதியாக இதை செயல்படுத்த உங்களை தூண்டிய விஷயம் என்ன, என்ன நடந்தது?

**ராபி கேலட்டி:** சரி. ஒரு புதிய விசுவாசியா, தேவனை பற்றி எனக்கு அதிகம் தெரியாது.

நான் விசுவாசியாகி சுமார் ஆறு மாதங்கள்தான் இருக்கும், வேதத்தை வாசிக்க

ஆரம்பித்தேன், ஆனா எந்த கல்லூரிக்கும் போகல, எந்த வேதாகம பட்டமும் இல்லை, தேவனை பற்றி அதிகம் தெரியாது. ஆனா தேவனை குறித்து ஆர்வத்தோடு இருந்தேன். நாங்க என்ன செய்வோம் என்றால் வெள்ளிக்கிழமை இரவு, என் நண்பர்கள் குழுவோடு, சேர்ந்திடுவேன். வெளிய சினிமாவுக்கோ இல்ல சாப்பிடும்படியோ எங்கேயும் போக மாட்டோம். அந்த வெள்ளிகிழமை இரவுகளில் நாங்கள் நாற்பத்தி ஐந்து நிமிடம் ஜெபித்திடுவோம், தேவனுக்கு முன்பாக நின்றிடுவோம், என்னோடு வண்டில உட்கார்ந்து ஜெபிப்போம், "தேவனே, உம்மை பற்றி ஜனங்களுக்கு சொல்லும்படியான வாசலை திறந்துதாரும்." இது பொதுவானதாக தோன்றும், ஆனா அந்த நாட்களை நினைத்து பார்க்கிறேன். சும்மா அப்படியே வண்டில நகர்த்தி சுற்றி வருவோம். என் நண்பர்களில் ஒருவர் சொன்னார், "அந்த நபருக்கு தேவன் தேவையாக இருக்கிறார்." அப்பதா நாங்கள், சாலையின் ஓரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, வண்டியிலிருந்து இறங்கி போய், சொல்வோம், "உங்களிடம் கிறிஸ்துவை பற்றி சொல்லும்படி தேவன் எங்களை இங்கே அனுப்பினார் என்று நம்புகிறோம்." அப்ப, ஜான், எத்தனை முறை என்று என்னால் சொல்ல முடியாது, பெரிய கடைகளின் மற்றும் அங்காடிகளின் வாகன நிறுத்தத்தில், ஜனங்களை தேவனுக்குள் நடத்தியிருக்கிறோம். அது சுவாரஸ்யமாக இருக்கும், ஏன்னா சிலர் எங்களிடம் சொல்லியிருக்காங்க, "என்னோடு வாழ்வை முடித்துகொள்ளும் கட்டத்தில் இருக்கிறேன்."அல்லது என் மனைவியை ஏமாற்ற தயாராக இருந்தேன்."அல்லது விவாகரத்தை பற்றி யோசித்து கொண்டிருந்தேன், ஆனா தேவன் இவர்களை என் வாழ்விற்குள் அனுப்பினார் என்பார்கள்." எங்களுக்கு தெரியும் எங்களாலேயோ அல்லது எங்க செய்கையினாலோ இது நடக்கல, ஆனா எங்க வாழ்வில் இருந்த கிறிஸ்துவின் அழைப்பதை ஏற்று அவர் கட்டளைக்கு கீழ்படிந்ததினால் இப்படி ஆயிற்று.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அந்த பாதையில் தான், ஒரு ஜெப கூட்டத்தை தேடிகொண்டு காரை ஊட்டுகொண்டு வந்த நபரின் சம்பவம் ஏற்ப்பட்டது. அது என்னவென்று சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** சரி. சாட்சிகளை பகிர்ந்துகொண்டு கிறிஸ்துவை பற்றி சொல்லிமுடித்த பிறகு, இந்த இடத்திற்குத்தான் பொதுவாக நாங்க போய் சாப்பிடுவோம். இந்த உணவுவிடுதியின் உரிமையாளர் அப்போதுதான் போதை அடிமைத்தனத்திலிருந்து சுகம் பெற்றுகொண்டிருந்தால் அவரிடமும் கிறிஸ்துவை பற்றி சொல்லுவோம். அவரை நாங்கள் சபைக்கும் ஜெப கூட்டத்திற்கும் அழைத்திருந்தோம். அவருடைய பதில் எப்போதும் ஒன்றுதான்,"தேங்க்ஸ், பட் நோ தேங்க்ஸ். தேவன் தேவை என்றால் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன் என்பார்." ஒரு காலையில் நாங்கள் ஜெபித்துகொண்டிருந்தபோது – காலையில எழும்பி 5மணிமுதல் 7 மணிவரை ஜெபிப்பது வழக்கம், அன்றைக்கும் ஜெபத்தின் மத்தியில், நாங்க ஜெபித்துகொண்டிருந்த அறைக்குள் ஒருவர் வந்து எனக்கு அருகில் அமர்வது போன்ற உணர்வு உண்டானது. அப்ப, ஜெப கூட்டத்தில் இருக்கும் யாராவது ஒருவராக இருக்கும் என்று நினைத்தேன், அதனால கண்களை திறக்கவில்லை.

ஒரு சில நிமிடங்களுக்குள், முடித்த பிறகு, என் கண்களை திறந்தேன் அது அந்த உணவு விடுதியின் உரிமையாளர். அன்று காலை ஜெபத்தை பற்றி தெரிந்துகொண்டு வந்திருந்தார். அப்பறமா அவரிடம் கேட்டோம், எங்கள, "எப்படி நீங்க கண்டு பிடிச்சீங்க? அதற்கு அவர், "நேற்று இரவு நான் என்னோட மனைவியை விட்டு பிரிந்துபோக நினைத்தேன், அவளை விவாகரத்து செய்து குடும்பத்தை விட்டு விலகிட நினைத்தேன் என்றார்." அதோடு, "இன்றைக்கு காலையில் கண் விழித்ததும் உணர்த்தப்பட்டேன், ஜெபிக்கிற இவர்களை நான் சந்திக்க வேண்டும் என்றிருந்தேன்." ஆவர் சொன்னார், "எனக்கு உங்க தெருவின் பெயர் மட்டும்தான் தெரியும்." அந்த தெருவில் முன்னும் பின்னுமாக வந்துட்டும் போயிட்டும் இருந்தாறாம். அவர் காரை விட்டு வெளியில் வந்ததும். ஒரு கதவை நோக்கி சென்றாராம். அவர் சொன்னார், "இதுதான் வீடு என்று நினைத்தேன்." அவர் கதவை தட்டும் படி கையை உயர்த்த்யதும், ஜெபிக்கிற ஜனங்களின் சத்தத்தை கேட்டாராம். மறுபடியும் கார்கிட்டவே போயிட்டாரு. அங்கு போய், "இவங்களுக்கு புத்தியே இல்லை என்றாராம்." ஆனா தேவன் அவரை போக விடவில்லை.

மறுபடியும் காரிலிருந்து இறங்கினார், வீட்டை நோக்கி நடந்துவந்தார், உள்ளே உட்கார்ந்தார், அவர் சொன்னார், “நான் இருக்க வேண்டிய இடம் இதுதான்.” ஜான், அன்றைக்கு சாயங்காலத்தில், தேவனிடத்தில் அவரை நடத்தினோம். எங்களுடைய வாழ்வில் தேவன் எங்களை பயன்படுத்தியதால் இது சாத்தியமானது.

இப்ப உண்மையான, கேள்வி இயேசு நம்மோடு இருக்கிறாரா என்பது கிடையாது? வசனத்திலிருந்து இயேசு நம்மோடு இருக்கிறார் என்று நமக்கு தெரியும். அதோட அருட்பணியை நிறைவேற்றி முடிக்க நமக்கு போதுமான சத்துவமும் வல்லமையும் இருக்கிறதாஎன்பது இப்போதைய கேள்வி இல்லை. இதற்கான பதில் இருக்கு, அவர் நமக்கு வல்லமையை கொடுத்திருக்கிறார். இப்ப நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி ஏனன்னா, “இயேசு போதுமா? இயேசுவே, நீங்க சொல்ற இடத்துக்கு நா போவேனா? நீங்க விரும்புகிற காரியத்தை நான் செய்வேனா என்பதுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நேயர்களே, மீண்டும், உங்களை ஊக்குவிக்கிறேன்.

வசனங்களை பற்றி பேசுகிற பிரசங்கியார்களின் செய்திகளை உட்கார்ந்து கேட்பது எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியும். ஆனா நான் என்ன நம்புகிறேன் என்றால் இதை கேட்க்கிற நீங்கள் உற்சாகத்தோடு முயற்சி செய்ய வேண்டும், அப்போது உங்களுக்குள் இது கிரியை செய்வதை பார்க்க முடியும். உங்கள் வாழ்வை இது மாற்றிடும். இதுதான் தேவ சித்தத்தின் மையத்தில் இருப்பதாகும். இயேசு நமக்கு கொடுத்திருக்கும் கட்டளைகளில் இதுதான் முக்கியமானது. இந்த திசையில் நிறைய உன்னதமான காரியங்கள் காத்துகொண்டிருக்கிறது, அதை முயற்சித்து பாருங்கள். இயேசு உங்களுடனே இருப்பதாக வாக்களிக்கிறார்.

சரி, அடுத்தவாரம், இந்த கட்டத்தை கடந்து போக போகிறோம். அப்படி செய்யலைன்னா என்ன நாடாகும்? புறப்பட்டு போய் சீஷர்களை உருவாக்குங்கள் என்ற இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் கிறிஸ்துவர்களின் நிராகரிப்பின் செயலின் விளைவு என்ன வாக இருக்கும்? அதை பற்றி நாம் பேசிட இருக்கிறோம். நீங்கள் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.